செய்தித்தாள்:தினமலர் நாள்:19.09.2017 பக்கம்:9

# திருவாரூர் மாவட்ட அறிவியல் இயக்கம் துளிர் வினாடி வினா போட்டி



நீடாமங்கலத்தில் நடந்த அறிவியல் வினாடிவினா போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் நீலன் அசோகன் பரிசு, சான்றிதழ் வழங்கினார்.

நீடாமங்கலம், செப்.19-

தமிழ்நாடு அறிவியல் இயக்கம் நடத்தும் மாவட்ட அளவிலான துளிர் வினாடி வினா போட்டி நீடாமங்கலத்தில் நடந்தது.

அறிவியல் இயக்க மாவட்ட தலைவர் பெருமான்ராஜ் தலைமை வகித்தார். போட்டிகளை மாநில செயலாளர் ஸ்டீபன்நாதன் தொடங்கி வைத்தார். துளிர் தமிழ் வழியில் 6,7,8 வகுப்புகளில் கொரடாச்சேரி ஒன்றியம் அபிவிருத்தீஸ்வரம் நடுநிலைப் பள்ளி முதலிடமும், தென்குவளவேலி நடுநிலைப் பள்ளி இரண்டாமிடமும், கூடூர் நடுநிலைப் பள்ளி மூன்றாமிடமும் பெற்றன.

9, 10ம் வகுப்புகளில் திருவாரூர் ஜி.ஆர்.எம் பெண்கள் மேல்நிலைப் பள்ளி முதலிடமும், பூந்தோட்டம் அரசு மேல்நிலைப் பள்ளி இரண்டாமிடமும், திருவாரூர் வ.சோ.ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மூன்றாமிடமும் பெற்றன. 11, 12ம் வகுப்புகளில் பூந்தோட்டம் அரசு மேல்நிலைப் பள்ளி முதலிடமும், கூத்தாநல்லூர் மன்ப-உல்-உலா மேல்நிலைப் பள்ளி இரண்டாமிடமும், எடமேலையூர் அரசு மேல்நிலைப் பள்ளி மூன்றாமிடமும் பெற்றன.

ஆங்கில வழியில் 6,7,8 வகுப்புகளில் திருத்துறைப்பூண்டி சாய்ராம் மெட்ரிக் பள்ளி, திருவாரூர் ஜிஆர்எம் பெண்கள் பள்ளி, மஞ்சக்குடி சுவாமி தாயானந்தா பள்ளி ஆகியன முதல் மூன்று இடங்களை பெற்றன. 9, 10ம் வகுப்புகளில் முத்துப்பேட்டை ரஹமத் பெண்கள் பள்ளி, நீடாமங்கலம் நீலன் மெட்ரிக் பள்ளி, மன்னார்குடி பாரதிதாசன் பள்ளி ஆகியன முதல் மூன்று இடங்களை பெற்றன.11, 12ம் வகுப்புகளில் மன்னார்குடி பாரதிதாசன் பள்ளி, திருவாரூர் சாய்ராம் பள்ளி, மஞ்சக்குடி சுவாமி தயானந்தா பள்ளி ஆகியன முதல் மூன்று இடங்களை பெற்றன.

வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அசோகன் பரிசு வழங்கினார். போட்டிகள் குறித்து மாவட்ட செயலாளர் பொன்முடி பேசினார். போட்டிகளை ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் திருஞானம், ஆசிரியர்கள் மோகனப்பிரியா, சித்ரா, டாக்டர் பாலசுப்பிரமணியன், ராமமூர்த்தி ஆகியோர் நடத்தினர். மகேந்திரன் நன்றி கூறினார்.

பாரத
வடக்கு
தங்க நல
இதனால் பொதுமக்களுக்கு
தங்கள் நகைகளை மேலே
கடனைத் திருப்பிச் செலுத்து
அறிவிப்புக் கடிதத்தை பதிவு
மீட்டுக் கொள்ளவில்லை. இந்
இதர செலவினங்களையும்,
தொகையினையும் செலுத்

## முன்விரோத தகராறில் வாகனங்கள் சேதம்: ஆட்டோ ஓட்டுனர் கைது

செய்தித்தாள்:தினகரன் நாள்: 19.09.2017 பக்கம்:17

## திருவாரூர் மாவட்ட அளவில்

# வினாடி-வினா போட்டியில் வென்றவர்களுக்கு பரிசு வழங்கல்

நீடாமங்கலம்,செப்.19: திருவாரூர் மாவட்ட அளவில் வினாடி-வினா போட்டியில் வென்றவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது.

தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பில் நீடாமங்கலம் நீலன் பள்ளியில் மாவட்ட அளவிலான துளிர் மற்றும் ஜந்தர் மந்தர் வினாடி வினா போட்டி நடைபெற்றது. போட்டிக்கு மாவட்ட தலைவர் பெருமாள் தலைமை வகித்தார். போட்டிகளை மாநில செயலாளர் ஸ்டீபன்நாதன் மற்றும் நீலன் அறக்கட்டளை தலைவர் அசோகன் ஆகியோர் தொடங்கி வைத்து பரிசுகள் வழங்கினர். வினாடி வினா போட்டிகள் குறித்து மாவட்ட செயலாளர் பொன்முடி பேசினார். போட்டிகளை ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் திருஞானம், ஆசிரியைகள் மோகனபிரியா, சித்ரா, டாக்டர். பாலசுப்ரமணியன், ஆசிரியர் ராமமுர்த்தி ஆகியோர் நடத்தினர். துளிர் தமிழ்வழி போட்டியில் 6,7,8 வகுப்புகளில் அபிவிருத்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி முதலிடமும், தென்குவளவேலி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி இரண்டாமிடமும், கூடூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மூன்றாமிடமும் பெற்றது.

9,10 வகுப்புகளில் திருவாரூர் ஜி.ஆர்.எம் பெண்கள் மேல்நிலைப்பள்ளி முதலிடமும், பூந்தோட்டம் அரசு மேல்நிலைப்பள்ளி இரண்டாமிடமும், திருவாரூர் வ.சோ ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மூன்றாமிடமும் 11,12 வகுப்புகளில் பூந்தோட்டம் அரசு மேல்நிலைப்பள்ளி முதலிடமும், கூத்தாநல்லூர் மன்ப உல் உலா மேல்நிலைப்பள்ளி இரண்டாமிடமும் , எடமேலையூர் அரசு மேல்நிலைப்பள்ளி மூன்றாமிடமும் பெற்றது. ஜந்தர் மந்தர் ஆங்கில வழியில் 6,7,8 வகுப்புகளில் திருத்துறைபூண்டி சாய்ராம் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி முதலிடமும், திருவாரூர் ஜி.ஆர்.எம் பெண்கள் மேல்நிலைப் பள்ளி இரண்டாமிடமும், மஞ்சகுடி சுவாமி தயானந்தா மேல்நிலைப்பள்ளி மூன்றாமிடமும் பெற்றது.

9,10 வகுப்புகளில் முத்துப்பேட்டை ரஹமத் பெண்கள் மேல்நிலைப்பள்ளி முதலிடமும், நீடாமங்கலம் நீலன் மேல்நிலைப்பள்ளி இரண்டாமிடமும், மன்னார்குடி பாரதிதாசன் மேல்நிலைப் பள்ளி மூன்றாமிடமும் பெற்றது. 11,12 வகுப்புகளில் மன்னார்குடி பாரதிதாசன் மேல்நிலைப்பள்ளி முதலிடமும், திருவாரூர் சாய்ராம் மேல்நிலைப் பள்ளி இரண்டாமிடமும், மஞ்சகுடி சாமி தயானந்தா மேல்நிலைப்பள்ளி மூன்றாமிடமும் பெற்றனர்.

வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு, பதக்கம், சான்றிதழ் வழங்கப்பட்டது. போட்டிகளில் 57 பள்ளி மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். முதல் இரண்டு இடங்களை பெற்ற பள்ளிகள் வரும் 25ம் தேதி நாகப்பட்டினம் ஈஜிஎஸ் பிள்ளை பொறியியல் கல்லூரியில் நடைபெறும் மண்டல போட்டிகளில் கலந்து கொள்ளலாம் என மாவட்ட செயலாளர் பொன்முடி தெரிவித்தார்.